# பல்கலைக்கழக அனுமதி மற்றும் உயர்தர கல்வி தொடர்பான வழிகாட்டல்


*Eng. A.M. Aslam Saja*

*செயலாளர், பழைய மாணவர் சங்கம் கல்முனை ஸாஹிறா கல்லூரி*

*விரிவுரையாளர், பொறியியல் பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழகம்*

*saja.aslam@gmail.com*

*077 395 8387*



*வெளியீடு:*

பழைய மாணவர் சங்கம்

2014-15 ஆண்டு செயற்குழு

கல்முனை ஸாஹிறா கல்லூரி

டிசம்பர் 2014

## 1. பல்கலைக்கழக அனுமதி:

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தினை முடித்துவிட்டு உயர்தர வகுப்பிலே மாணவர்கள் நுழையும் வேளை அப்பிரிவில் காணப்படும் 5 பிரிவுகளில் ஒன்றை தெரிவுசெய்கின்றனர்.

1. கலை
2. வர்த்தகம்
3. உயிரியல் விஞ்ஞானம்
4. பௌதீக விஞ்ஞானம்
5. புதிதாக சென்ற வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பிரிவு

தனது எதிர்கால இலக்கை தீர்மானிக்கும் இக்கட்டத்தினை ஒரு மாணவன் முடிவெடுக்கும் போது பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இம்முடிவினை சிறந்த முடிவாக மேற்கொள்ள (informed decision) தனக்கு தேவையான தகவல்கள் அனைத்தும் கிடைக்கப்பெறுகிறதா என்ற கேள்வி எம்முன் எழுகிறது. இத்தகவல்கள் அனைத்தையும் அவனுக்கு கொடுக்கக்கூடிய ஒரு நிறுவனம் அல்லது மனித வளவாளர்கள் காணப்படுகிறார்களா என்பது கூட எம் சமுகத்தை பொறுத்தவரையில் சந்தேகமே. அதாவது Career Guidance Centre அல்லது Career Guidance Counselors எங்கு காணப்படுகிறார்கள். அவ்வாறு காணப்படுமிடத்து அதன் தகமை அதன் நம்பகத்தன்மை என்ன என்ற கேள்விகளும் எழுகின்றது. எமது சமுகத்தில் காணப்படும் இந்த இடைவெளியினை பாடசாலைகளும் அதனோடு தொடர்புடைய சமுக நிறுவனங்களுமே (பழைய மாணவர் சங்கம், பிரதேச கல்வி அபிவிருத்தி நிறுவனங்கள் போன்றன) நிவர்த்திக்க பொருத்தமான நிறுவனங்களாக நாம் அடையாளம் காணமுடியும்.

முஸ்லிம் சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் அதிகமாக வாழுகின்ற மாவட்டமான அம்பாறை மாவட்டத்தின் 2011/2012 ம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதியினை பற்றி இவ்விடத்தில் சற்று நோக்குவது பொருத்தமாக அமையும் என்று நினைக்கிறேன்.

2011/2012 ல் அம்பாரை மாவட்டத்திலிருந்து மொத்தமாக எல்லா துறைகளுக்குமாக (87 வித்தியாசமான பட்டப்படிப்பு கற்கை துறைகள்) பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை – 609.

இதில்

1. கலைத்துறை தொடர்பான கற்கைநெறிகளுக்கு 37% மாணவர்களும்
2. வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கற்கைநெறிகளுக்கு 17% மாணவர்களும்
3. உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் தொடர்பான துறைகளுக்கு 46% மாணவர்களும் அனுமதி பெற்றுள்ளனர்.

க.பொ.த உயர்தர பரீட்சை போட்டித்தன்மையானது (Competitive). சித்தியடைகின்ற எல்லா மாணவர்களும் இலங்கை தேசிய பல்கலைக்கழகங்கள் 14 இலும் மற்றும் அவற்றுடன் இணைந்த 5 உயர்கல்வி நிறுவனங்களிலும் அனுமதி பெற முடியாது. இதில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயம் தான் Merit முறை மற்றும் மாவட்ட மட்ட கோட்டா முறை. இதிலும் கலைத்துறையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் தேசிய Merit முறை மூலமே தெரிவ செய்யப்படுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைத்துறையில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1993/1994 அல்லது 2002/2003 ல் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு குறையாதவாராக வைக்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து துறைகளுக்கும் தேசிய Merit முறை மூலமாக 40% ம் மேலதிகமாக மாவட்ட மட்ட எண்ணிக்கை ரீதியாக 60% முமாக காணப்படுகிறது.

எனவே ஒரு உயர்தரம் கற்கும் மாணவன் எத்துறையில் பயின்றாலும் சரி, தான் தேசிய ரீதியாக சிறந்த பெறுபேற்றை பெற்று Merit முறை முலம் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற உயர்ந்த இலக்கை நோக்காக கொள்ளும் போது தனது பிரிவிற்கு பொருத்தமான தான் விரும்பிய கற்கை நெறிக்கும், அதிலும் தான் விரும்பிய பல்கலைக்கழகத்திற்கோ அல்லது தேசிய ரீதியில் மிகச்சிறந்த பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கிறது.

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் உயர்தர பிரிவு வரலாற்றில் 1968லிருந்து இன்று வரை 1212 மாணவர்கள் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியிருக்கிறார்கள். இவற்றில்

- 40% பௌதீக விஞ்ஞானத்துறைக்கும்
- 29% உயிரியல் விஞ்ஞானத்துறைக்கும்
- 17% வர்த்தக மற்றும் முகாமைத்துவ துறைக்கும்
- 14% கலைத்துறைக்கும் பல்கலைக்கழகங்களுக்கு சென்றிருக்கிறார்கள்.

- 200 பேர் பொறியியல் துறைக்கும் 125பேர் மருத்துவ துறைக்கும் தெரிவாகி தேசிய பல்கலைக்கழகங்களுக்கு சென்றிருக்கிறார்கள் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

கல்முனை ஸாஹிரா கல்லூரி அமைந்துள்ள அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு துறையிலிருந்தும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| **Ampara district** | **2010** | **2011** |
|---|---|---|
| Physical Science | 130 | 175 |
| Biological Science | 150 | 175 |
| Commerce | 100 | 150 |
| Arts | 225 | 300 |
| **Total** | **605** | **800** |

இதனடிப்படையில் பார்க்கும் போது கல்முனை ஸாஹிராக்கல்லூரியிலிருந்து பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேற்றை பெறும் போது தேசிய பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறமுடியும். இதை உணர்ந்து மாணவர்கள் அனைவரும் சிறப்புச்சித்தியை அடைய முயற்சிக்க வேண்டும் என்பதே பழைய மாணவர் சங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இதற்கான தேவையான வசதிகளை உயர்தர மாணவர்களுக்கு செய்து கொடுக்க பழைய மாணவர் சங்கம் தயாராகவுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புவதோடு மாணவர்கள் தமது தேவைகளையும் ஆலோசனைகளையும் பெற விரும்பின் பழைய மாணவர் சங்க இளம் பட்டதாரிகள் அமையத்தினூடாக தெரியப்படுத்துமாறு வேண்டிக்கொள்கிறேன்.

## பல்கலைக்கழக அனுமதியும் மாற்று பட்டப்படிப்பு வழிமுறைகளும்

## (University admission and alternative undergraduate options)

2013ம் ஆண்டிற்கான உயர்தர (G.C.E A/L) பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள அதேவேளை, 2012ம் ஆண்டிற்கான Z Score வெட்டுப்புள்ளிகளையும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

2011ம் ஆண்டில் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட கிட்டத்தட்ட 6000 மாணவர்களை உள்ளாக்குவதில் வளப்பற்றாக்குறை ஒரு முக்கியமான பிரச்சினையாக அரசாங்கம் முன்வைத்த நிலையில், இதற்கு மேலாக உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தும், அரச பல்கலைக்கழகத்தில் (Public University) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு (University Grant Commission -UGC ) வெளியிடும் Z வெட்டுப்புள்ளி அடிப்படையில், அனுமதி பெறமுடியாமல், பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் காணப்பட்டனர்.இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் புதிய பீடங்களை நாட்டில் உள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் ஆரம்பித்தது. இதில் 2 புதிய பொறியியல் பீடங்களும் அடங்கும்.

உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தும், பல்கலைக்கழக அனுமதி பெற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாமல் பல மாணவர்கள் காணப்படுகிறார்கள். இந்நிலை ஒவ்வொரு வருடமும் காணப்படுகிறது. இதனால் மாணவர்களும், பெற்றோர்களும் பல மாற்று பட்டப்படிப்பு கற்கைகளை தேடுவதில் ஆர்வம் காட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2006/7ம் ஆண்டில் உலக வங்கியின் ஓர் ஆய்வு முடிவின்படி, இலங்கையில் 21% வீதமான மாணவர்கள் உயர் கல்வித்திட்டத்தில் (higher education) உள்ளாக்கப்பட்டுள்ள அதே வேளை இதில் 4% மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரிகளிலும் 2.5% தனியார் நிறுவனங்களிலும் 1.5% திறந்த பல்கலைக்கழகத்திலிருந்தும் வெளியாகியுள்ள அதேவேளை 12.2% வெளிவாரி பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் உள்வாங்பபட்டுள்னர், என கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 15 அரச சார் பல்கலைக்கழகங்கள் (Public) காணப்படுகின்றன. இவற்றில் திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த, ஏனைய 14 பல்கலைக்கழகங்களுக்கும், மற்றும் 4 உயர்கல்வி நிறுவனங்களுக்கும் (எல்லாம் UGC அனுமதியின் கீழ்வருவன), உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில், பட்டப்படிப்பிற்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். 4 உயர்கல்வி நிறுவனங்களாவன,

(1) கம்பாஹா விக்கிற மாராச்சி ஆயர்வேத நிலையம்,
(2) சுதேச வைத்திய நிறுவனம்.
(3) கொழும்பு பல்கலைக்கழக கணணிக் கல்லூரி,.
(4) சுவாமி விபுலான நடன அழகியற் கற்கைகளுக்கான நிறுவனம்.

இலங்கையில் எல்லா பட்டப்படிப்பு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களையும் நோக்குவோமானால் 2010/2011ம் ஆண்டில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலமாக மேற்குறிப்பிட்ட 18 அரசசார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிலும் , 46 தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலும் மற்றும் 10 அரச சார் ஆனால் UGC ன் அனுமதிக்கு வெளியில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் என, எல்லாமாக 74 உயர்கல்வி நிறுவனங்களிலிருந்தும் (46 தனியார் + 18 + 10 ) 19, 566 பட்டதாரிகள் வெளியாகியுள்ளனர்.

இவர்களில்,

64% னோர் அரச- UGC நேரடி அனுமதி மூலமும்,

22% னோர் அரச- non- UGC அனுமதி மூலமும்,

14% னோர் தனியார் பல்கலைக்கழகங்களிலுமிருந்து வெளியாகியுள்ளனர்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், 2008ம் ஆண்டிலிருந்து தனியார், மற்றும் non-UGC நிறுவனங்களிலிருந்து வெளியான பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையாகும்.
அரச-பல்கலைக்கழகங்கள் தவிர, UGC ன் பல்வேறு கீழ் உயர்கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் UGC ன் கீழ் (A/L z வெட்டுப்புள்ளியின் அடிப்படையில்) 4 உயர்கல்வி நிறுவனங்களே மாணவர்களை அனுமதிக்கின்றன. அரச பல்கலைக்கழகங்களிலும் மேற்குறிப்பிட்ட 4 உயர்கல்வி நிறுவனங்களிலும் பட்டப்படிப்பு துறையில் 87 வித்தியாசமான பாடநெறிகள் காணப்படுகின்றன. (2010/2011ம் ஆண்டிற்கான தேர்வில்). 2011/2012ல் மேலதிக 3 புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறியவை தவிர 2011ம் ஆண்டு பெறப்பட்ட தரவுகளின்படி, இலங்கையில் 46 தனியார் மற்றும் 10 அரச-சார் உயர்கல்வி நிறுவனங்களும் (UGC)ன் அனுமதிக்கு வெளியில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை (Undergraduate degree programmes) வழங்குவதாக அண்மையில் LIRNE ASIA நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு கூறுகின்றது.

**மாற்று வழிமுறைகள்:-**

இலங்கையில் (UGC)ன் மேற்பார்வையின் கீழ் வரும் அரச பல்கலைக்கழகங்கள் (Public Universities) மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு அப்பால், பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்கும் 3 வகையான வழிமுறைகள்/நிறுவனங்கள் காணப்படுகின்றன.

(1) தனியார் பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்கள் (Private Universities/ Higher Education Institute)
(2) UGC ன் நேரடி அனுமதி முறையின் கீழ்வராத, அரச சார்/பகுதி அரச சார் பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும். (Public-non-UGC mediated Institutes).
(3) அரச பல்தலைக்கழதங்களில் காணப்படும் UGC அனுமதிக்கு வெளியில் (non-ugc) காணப்படும் வெளிவாரி கற்கை நெறிகள் (External degrees)

2010/2011ல் தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியான 2,733 பட்டப்படிப்பு மாணவர்களில் அதிகமானோர் (1,552 பேர்) கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைசார்ந்தோர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 867 பேர் வர்த்தகத்துறை சார்ந்தோராகும். இது தவிர 4229 பட்டதாரிகள் அரச, non-UGC பட்டதாரிகளாக வெளியேறிவுள்ளனர் இதில் 3000 பேர் தேசிய கல்வி நிறுவனத்தினால் (NIE) ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப்படிப்பு துறைகளில் பட்டம் பெற்றோராவர்.

இதே வேளை கணனி மற்றும் IT துறைகளில் 429 பட்டதாரிகள் மாத்திரமே தேசிய அரச(UGC) பல்கலைக்கழகங்களில் வெளியாகியுள்ளனர் (இது, மொத்தமாக 2011ல் வெளியான கணனி/IT துறை பட்டதாரிகளில் 20% மாத்திரமேயாகும்) என்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட 56 தனியார் மற்றும் non-UGC நிறுவனங்களிலும் கிட்டத்தட்ட 258 துறைகளிலும், 54 (Specialization) விசேட துறைகளிலும் பட்டப்படிப்பு கற்கைகள் காணப்படுகின்றன. Non-UGC அரசசார் உயர்கல்வி நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முழுமையாகவோ/பகுதியாகவோ நிதியை

பெறுகின்றன. ஆனால் இவ்வுயர்கல்வி நிறுவனங்களுக்கான அனுமதி UGCனால் நெறிப்படுத்தப்படுவதில்லை. இதனால் இவை அரச சார் ஆனால் NON-UGC என குறிப்பிடப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட 10 NON-UGC உயர்கல்வி நிறுவனங்களின் தகவல் பின்வருமாறு:

(1) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்.
(2) தேசிய கல்வி நிறுவனம். (National Institute of Education)
(3) விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய நிறுவனம் (IAT)
(4) மனிதவள அபிவிருத்தி நிறுவனம். (IHRD)
(5) தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் - (National Institute of Business Management - NIBM).
(6) சமுத்திர துறை சார் பல்கலைக்கழகம் (Ocean University)
(7) University of Vocational Technology (UNIVOTEC)
(8) தேசிய சமூக அபிவிருத்தி கல்வி நிறுவனம் (National Institute of Social Development -NISD).
(9) வரைதல் மற்றும் அளவையியல் நிறுவனம் (Institute of Surveying & Mapping-ISM)
(10) திறந்த பல்கலைக்கழகம் (Open University)

இவற்றில் கொழும்பு பல்கலைக்கழகங்களிற்கு கீழ்வரும் IHRD, IAT கல்வி நிறுவனங்கள், கொழும்பு பல்கலைக்கழக பட்டம் வழங்குகின்றன. NISD, NIBM, ISM ஆகிய நிறுவனங்கள், (UGC)னால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்குகின்றன. இவை தவிர ஏனைய 5 உயர்கல்வி நிறுவனங்களும் பாராளமன்ற சட்டத்தின் கீழ் அவற்றின் பிரத்தியேக பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்குவதற்கு உரித்துடையின.

**தனியார் பல்கலைக்கழகங்கள்:-**

மேலே குறிப்பிட்டது போன்று, 46 தனியார் நிறுவனங்களில் 2010/2011ம் ஆண்டில் 27 நிறுவனங்கள் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை பூர்த்தி செய்து பட்டதாரிகளுக்கு பட்டமளித்துள்ளனர். ஏனைய நிறுவனங்களில் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள போதும், இன்னும் பட்டங்கள் வழங்கப்படவில்லை.

இந் 46 நிறுவனங்களும் 212 கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றன. இவற்றில் 77 வர்த்தக துறைகான கற்கை நெறிகளும், 63 கணனி/தகவல் தொழில்நுட்பவியல் கற்கை நெறிகளும், 32 பொறியியல் கற்கை நெறிகளுமாகும்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் மிக அதிகமான கனணி/தகவல் தொழில்நுட்பசார் கற்கை நெறிகளை (63) தனியார் நிறுவனங்களே வழங்கிவருகின்றது. (அரச சார் பல்கலைக்கழகங்களில், 40 மாத்திரமே) ஆனால் அரச சார் பல்கலைக்கழகங்களில் வர்த்தகம், பொறியியல், கணனி/தகவல் தொழில்நுட்பம் தவிர்ந்த 300 வகையான மற்ற கற்கைகள் காணப்படுகின்ற அதேவேளை, தனியார் நிறுவனங்களில் இவ்வாறான மற்ற (Other) கற்கை நெறிகள் 40 மாத்திரமே காணப்படுகின்றன என்பதும் கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

மேலும் 4 தனியார் பல்கலைக்கழகங்கள் மாத்திரமே பல்வேறு கற்கைநெறிகளை வழங்குகின்றன. ஏனைய 42 தனியார் உயர் கல்வி நிறுவனங்கள், வர்த்தகம், அல்லது கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஒன்றை அல்லது இரண்டு துறைகளை மாத்திரம் கொண்டதாகவே காணப்படுகின்றன.

Aquinas உயர்கல்விக்கான கல்லூரி, Gateway பட்டப்படிப்பு கல்லூரி, கொழும்பு Royal Institute மற்றும் Spectrum விஞ்ஞான தொழிநுட்ப நிறுவனம், ஆகிய நான்குமே பல்வேறு துறையில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்கும் தனியார் கற்கை நிறுவனங்களாகும்.

தனியார் பல்கலைக்கழகங்கள், மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கற்கை நெறிகள் மற்றும் அவை தொடர்பான மேலும் பல தகவல்களை அவற்றிக்கான கட்டணங்கள், அடங்கிய ஆய்வுகள் மேலோட்டமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் கற்கைநெறிகளின் தராதரம் பற்றியும் இன்னும் ஆழமான ஆய்வுகள் இல்லை என்பதும் கவணிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**வெளிவாரி கற்கை நெறிகள்**

இலங்கையில் காணப்படும் 14 அரச பல்கலைக்கழகங்களில் 2யைத்தவிர (ஊவா வெல்லஸ்ஸ மற்றும் கற்புலன் ஆற்றுகை கலை பல்கலைக்கழகங்கள்) ஏனைய எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் கிட்டத்தட்ட 30 வெளிவாரி கற்கை நெறிகள் காணப்படுகின்றன. இவற்றில் அதிகமானவை கலை, வணிக முகாமைத்துவம் மற்றும் வர்த்தக துறை கற்கை நெறிகளாகும். இவை தவிர தகவல் தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞான துறைகளிலும் கற்கை நெறிகள் காணப்படுகின்றன. அண்ணளவாக ஆண்டு தோறும் 5000 தொடக்கம் 8000 பேர் பட்டம் பெறுகின்றனர். 2011 ம் ஆண்டில் 6333 பேர் வெளியாகினர். இவர்களில் 70%மானோர் கலைத்துறை பட்டதாரிகளாவர். 2011ல் வெளியான மொத்த வெளிவாரி பட்டதாரிகளில் 75% ஆனோர் (4805) பேர் பெண்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட எல்லா விடயங்களும் கல்வி சார் தகமைகளுடன் தொடர்பான கற்கை நெறிகளாகும்.. (Academic Qualifications). ஆனால் இன்னும் அதிகமான மாணவர்கள் தொழில் சார் தகைமைகள் (Professional Qualifications) பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல தொழில்சார் கற்கை நெறிகளையும் கற்கிறார்கள். இவை தொடர்பான விடயங்களிலும் மாணவர்கள் சிறந்த தெளிவைப்பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

(இக்கட்டுரை 2013ம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் எழுதப்பட்டது. இதன் பின்னர் கடந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதி மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது).

OLD BOYS' ASSOCIATION
Kalmunai Zahirians
Zahira College - Kalmunai
1949 - 2014
Address: Old Boys' Association Secretariat, Zahira College, Kalmunai.
secretary.main@kalmunaizahiraoba.lk
Telephone: +94 (0) 67 22 21887
Secretary: +94 (0) 77 395 8387
www.kalmunaizahiraoba.lk

## OBA அங்கத்துவம் வழங்கலும், வழிகாட்டல் நிகழ்வும்

கல்முனை சாஹிறா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் 2014 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலம் : 06-01-2015 (எதிர்வரும் செவ்வாய்க்கிழமை)

நேரம் : 9 AM முதல் 12 AM வரை

இடம் : காரியப்பர் மண்டபம் - கல்முனை சாஹிறா கல்லூரி

மேற்படி நிகழ்வில்

- பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் பெறல்
- இரண்டாம் தடவை தோற்ற விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் கற்றல் வழிகாட்டல்கள்
- ஏனைய துறைகளை நாட விரும்பும் மாணவர்களுக்கான வழிகாட்டல்கள்
- தேசிய பல்கலைகழகம் நுழைவோருக்கான வழிகாட்டல்கள்

என்பன நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையிலும் அனுபவமிக்கவர்களினால் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படும். அதேவேளை மாணவர்களின் சந்தேகங்களுக்கும் பிரத்தியேகமாக பதிலளிக்கப்படும்.**

எனவே இந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்குறோம்.

ஏற்பாட்டுக்குழு
பழைய மாணவர் சங்க இளம் பட்டதாரிகள் பேரவை
கல்முனை சாஹிறா தேசிய கல்லூரி

செயலாளர்
பழைய மாணவர் சங்கம் - ஸாஹிறா கல்லூரி கல்முனை

President: Mr. PMM. Bathurdeen (Principal, ZCK)
Secretary: Eng. AM. Aslam Saja
Treasurer: Mr. ARM. Yoosuff
Auditor: Mr. KM. Muzammil Huzain
Media Coordinator: Mr. UK. Kalideen
Vice Presidents: Mr. ALM.Saleem (DS)
Dr. N. Ariff (DMO)
Dr. SL. Riyas
Asst. Secretary: Mr. ALA. Majeed
Eng. MCK. Nisath
Asst. Treasurer: Mr. AMM. Musthakeem
*Those who unite will achieve the goal*